**அம்பன்கங்க கோரளை பிரதேச சபையி - 2024**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

அம்பன்கங்க கோரளை பிரதேச சபையின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமான மற்றும் செலவினக் கணக்கு, மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுக்குரிய தகவல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களுக்குரிய குறிப்புக்களுடன் கூடிய 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 172(1) உப பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 10(1) உப பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காண்பிக்கப்பட்டுள்ளன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்களிலிருந்து 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அம்பன்கங்க கோரளை பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டு நடைமுறைகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்பான ஆளுகைத் தரப்பினரின் பொறுப்பு

இந் நிதிக் கூற்றுக்கள் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு நடைமுறைகளுக்கு அமைவாக தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு ஆளுகைத் தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள், சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வு விடயப் பரப்பு (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)**

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்றவை என்பதற்கு நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வு அறிக்கையை வழங்குவதும் எனது குறிக்கோளாகும். நியாயமான உறுதிப்பாடானது உயர் மட்டத்திலான ஒரு உறுதிப்பாடாகக் காணப்படுகின்ற போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எவ்வேளையிலும் பொருண்மையான பிறழ் கூற்றுக்களை வெளிப்படுத்தும் என்பதற்கான ஒரு உத்தரவாதமாக இருக்கமாட்டாது. மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கத்தை ஏற்படுத்துவதன் காரணமாக பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் ஏற்படக்கூடியதுடன் இந்நிதிக் கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துபவர்களால் எடுக்கப்படுகின்ற பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கவனித்தல் வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக என்னால் கணக்காய்வின் போது தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் மேற்கொள்ளப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் மோசடிகள் ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான தெளிவொன்று பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்திய கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தமானதன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புகளின் வெளிப்படுத்தல்கள் மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்களுக்கு அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் நிகழ்வுகள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளது எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்.

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட கட்டளைகளுக்கு இணங்க பிரதேச சபை செயற்படுகின்றதா எனவும்.

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்.

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கால எல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்.

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் கீழே குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகள் தொடர்பாக விசேட ஏற்பாடுகள் உள்ளடக்குகின்றன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## 1.6 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் போது ஏல விற்பனை செய்யப்பட்ட 03 தளபாட தொகுதிகள் மற்றும் 07 இயந்திர தொகுதிகள் மற்றும் இயந்திரங்களின் மொத்த தொகையான ரூபா. 228,553 மீளாய்வாண்டின் கணக்குகளிலிருந்து அகற்றப்படவில்லை. | 2025 ஆம் ஆண்டின் கணக்குகளை தயாரிக்கும் போது சீராக்குவதாக. | சரியாக கணக்குகள் தயாரிக்கப்பட வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டில் 05 அபிவிருத்தி திட்டங்களுக்கான செலவிடப்பட்ட ரூ. 5,016,801 தொகை மூலதனமாக்கப்பட வில்லை. | - மேற்படி - | - மேற்படி - |
| (இ) | மீளாய்வாண்டில் 4 சந்தர்ப்பங்களில் பெறப்பட்ட மொத்த வருமானமான ரூ. 1,307,552 தொகையை கணக்கில் பதிவு செய்யப்படாமை காரணமாக, காசு மீதி அந்தத் தொகையால் குறைதது காண்பிக்கப்பட்டிருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |
| (ஈ) | மீளய்வாண்டில், 21 சந்தர்ப்பங்களில், ரூ. 308,915 முன்பணத் தீர்வின் போது முற்பணக் கணக்கில் செலவு வைக்கப்படுவதற்குப் பதிலாக காசேட்டில் | - மேற்படி - | - மேற்படி - |

செலவு வைக்கப்பட்டுள்ளது. இதன் விளைவாக காசேட்டு மீதி அத் தொகையால் குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது.

**1.6.2 இணங்காத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டின் , இறுதி திகதியில் உள்ளவாறு காசேடின் மீதி ரூபா 1,872,869 ஆக இருந்த போதிலும் நிதிக் கூற்றுக்களில் அம்மீதி ரூபா 295,768 எனக் காண்பித்த காரணத்தால் ரூபா 1,577,101 ஆன வேறுபாடு ஒன்று இருந்தது. | 2025 இன் ஆண்டிற்கான இறுதிக் கணக்கைத் தயாரிக்கும் போது திருத்தம் செய்யப்படுமென. | கணக்க மீதிகள் உரிய பதிவேடுகள் அட்டவணைகளுடன் ஒப்பிடப்பட வேண்டும். |

**1.6.3 கணக்காய்விற்காக தேவையான எழுத்துமூல சான்றுகளின்மை**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டின் நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்ட ரூபா 4,187,127 கூட்டுத்தொகையான 08 சொத்து விடயங்கள் மற்றும் ரூபா 516,002 ஆன 13 பொறுப்பு விடயங்களுக்குரியு பதிவேடு, அட்டவணைகள் மற்றும் கோவைகள் சமர்ப்பிக்கப்படா மையால் அவற்றை திருப்திகரமாக பரீட்சிக்க முடியாதிருந்தது. | குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதுடன் ,எதிர்காலத்தில் மீதிகளைத் தீர்க்க நடவடிக்கை எடுக்கப்படுவதாக. | கணக்கு மீதிகளை உறுதிப்படுத்தும் உரிய ஆவணங்கள் அட்டவணைகள் மற்றும் கோவைகள் சமர்ப்பிக்க வேண்டும். |

**1.7 இணக்கமின்மைகள்**

**சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான இணக்கமின்மைகள்**

சட்டங்கள், விதிகள், மற்றும் பிரமாணங்களுடனான இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள், மற்றும் பிரமாணங்களுடனான இணங்காமை | இணக்கமின்மை | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- | --- |
| **(அ) 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டம்** | | | |
| 128 ஆம் பிரிவு | சபை பயன்படுத்தும் 85 காணித் துண்டுகளின் உரித்தினை கையேற்கப்பட்டி ருக்கவில்லை. | இந்த ஆண்டில் பல காணிகளின் உரித்தைப் கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சபைக்குச் சொந்தமான காணிகளின் உரிதகை கையேற்க வேண்டும். |
| **(ஆ) இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின்** | | | |

| | | | |
|---|---|---|---|
| **நிதிப் பிரமாணம்**<br>நி.பி 571(3) | மீளாய்வாண்டின் இறுதி திகதியில் உள்ளவாறு 6 இற்கும் 8 இற்கும் இடைப்பட்ட காலப்பகுதிக்குரிய காலாவதியான ரூபா . 711,934 பெறுமதியான 07 வைப்புக்கள் தீர்வு செய்யப்படவில்லை. | வைப்பாளர்கள் தெரியப்படுத்தியதன் பின்னர் வருமானத்திற்கு எடுப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக. | காலாவதியான வைப்புக்கள் தீர்வு செய்யப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 1,927,206 ஆக இருந்ததுடன், அதற்கு எதிராக முன்னைய ஆண்டின் மீண்டுவரும் வருமானத்தை விஞ்சிய மீண்டெழும் செலவினம் ரூபா 244,365 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

**மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்**

செயலாளரினால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | | 2024 | | | | 2023 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமான மூலம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட் ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீதவரியும் வரியும் | 208,000 | 209,455 | 203,140 | 17,906 | 182,500 | 265,727 | 254,136 | 11,591 |
| (ii) | வாடகை | 612,400 | 378,645 | 383,415 | 54,455 | 564,400 | 370,175 | 310,550 | 59,225 |
| (iii) | அனுமதிப் பத்திரக் கட்டணங்கள் | 296,100 | 277,118 | 277,118 | - | 255,100 | 197,000 | 197,000 | - |
| (iv) | ஏனைய வருமானம் | 5,577,000 | 5,924,659 | 5,242,655 | 3,676,348 | 8,341,000 | 5,380,737 | 2,383,793 | 2,994,344 |
| | | 6,693,500 | 6,789,877 | 6,106,328 | 3,748,709 | 9,343,000 | 6,213,639 | 3,145,479 | 3,065,160 |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் இறுதி திகதியில் உள்ளவாறு 02 கணக்கு மீதிகளின் மொத்தம் ரூபா 8,181,927 ஆக இருந்ததுடன் அதில் 01 வருடத்திற்கும் 5 இற்கும் | நிர்மாண மற்றும் ஏனைய நானாவித கடன்பட்டோர் மீதிகளை அறவிடுவதற்கு தேவையான நடவடிக்கை எடுப்பதாகவும். | பெறவேண்டிய மீதிகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட |

| | | | |
|---|---|---|---|
| | இடைப்பட்டிருந்ததுடன் ரூபா 310,595 ஆகவும் 5 ஆண்டுகளுக்கு மேற்பட்ட மீதி ரூபா 2,914,879 ஆகவும் இருந்தது. | | வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டின் இறுதி திகதியில் செலுத்த வேண்டிய 2 கணக்கு மீதிகளின் மொத்தம் 2,976,872 ஆக இருந்ததுடன் அதில் 1 ஆண்டிற்கும் 5 இற்கும் இடைப்பட்ட மீதி ரூபா 372,005 தொகையும் 5 ஆண்டுகளுக்கு மேற்பட்ட மீதி ரூபா 1,366,678 ஆக இருந்தது. | நிர்மாண மற்றும் ஏனைய நானாவித கடன்கொடுத்தோர் மீதிகளை தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக. | செலுத்த வேண்டிய மீதிகளை தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும. |

## 3.2 சொத்துக்கள் முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மொத்தம் ரூபா 7,466,102 பெறுமதியான 04 வாகனங்கள், ஒரு மின்பிறப்பாக்கி மற்றும் ஒரு கொங்கிரீட் கலவை இயந்திரம் என்பன 08 முதல் 20 ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலப்பகுதியில் செயலிழந்து அல்லது குறைவாகப் பயன்படுத்தாமல் காணப்பட்டன. | கருத்து தெரிவிக்கவில்லை. | பய்ன்படுத்து வதற்கோ அல்லது கைதவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | சபை பயன்படுத்தும் 14 மயானங்கள், அலுவலகக் கட்டிடம் மற்றும் மெதிஹக்க பல்நோக்குக் கட்டிடம் உள்ளிட்ட கட்டிடங்களைக் கொண்ட 19 காணிகள், 50 பொதுக் கிணறுகள் மற்றும் விளையாட்டு மைதானங்களுடனான 02 காணிகள் ஆகியவற்றின் உரித்து கையேற்கப்படவில்லை. | - மேற்படி - | சபைக்கு சொந்தமான ஆதனங்களின் உரித்தினை கையேற்க வேண்டும். |
| (இ) | சபை பயன்படுத்தும் மொத்தம் ரூபா 1,500,000 ஆன 03 வாகனங்களின் உரித்து கையேற்கப்பட்டிருக்கவில்லை. | - மேற்படி - | சபைக்கு சொந்தமான வாகனங்களின் உரித்தினை கையேற்க வேண்டும். |